சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.72/2020

மசா.1

பெயர் : சாந்தி

க/பெ : பிரகாஷ்

நாள். 22.04.2022

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் எதிர்மனுதமனுதாரரின் வாகனம் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முழுமையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எனக்கு நஷ்ட ஈடு 2 ம் எதிர்மனுதாரர் தான் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

சாலை விபத்தில் இறந்து போனது எனது கணவர். சாலை விபத்தை நானோ மற்ற மனுதாரர்களோ நேரடியாக பார்க்கவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் இருசக்கர வாகனத்தை சாலை விதிகளை மதித்து மெதுவாக மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஓட்டிச்சென்றார் என்றும், எனது கணவர் தான் சாலையில் தெற்கு பக்கத்தில் இருந்து வடக்கே செல்வதற்காக வாகனம் வருவதை கவனிக்காமல் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல, அதனால் இந்த சாலை விபத்திற்கு எனது கணவரின் அஜக்கிரதயும் கவனக்குறைவும் தான் காரணம் என்றால் சரியல்ல. சாலை விபத்து நடந்த உடன் எனது கணவரை திருச்சி அட்லஸ் மருத்துவமனக்கு அழைத்து சென்றோம், எனது கணவர் சாலை விபத்து நடந்த மறுநாள் இறந்துபோனார். எனது கணவர் அட்லஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ரூ.50000 மருத்துவ செலவு ஆனதாக தவறா கசொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்தபோது அவருக்கு வயது 48 என்று குறைத்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் டீ கடை நடத்தி மாதம் ரூ.30000 சம்பாதித்து மனுவிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் பயிற்சியாளர் உரிமம் தான் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. பயிற்சியாளர் உரிமம் வைத்துள்ள நபர் இருச்சக்கர வாகனம் ஓட்டும் போது அவருக்கு பின்னால் முழுமையான ஓட்டுநர் உரிமம் உள்ள நபர் பின்னால் அமர்ந்து செல்ல வேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாலை விபத்து நடந்த சமயத்தில் 1ம்எதிர்மனுதாரரின் வாகனத்தில் எல் போர்ட்டு இல்லை என்றும் அதன் ஓட்டுநர் தலைகவசம் அணியவில்லை என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல்

இருசக்கர வாகனம் ஓட்டி செல்வது சாலைவிதிகளையும் காப்பீடு விதிகளையும் மீறிய செயல் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த சாலை விபத்தில் எனக்கு நஷ்ட ஈடு கிடைக்க வாய்ப்புள்ளது என்றால் அதை 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்ட ஈடு அதிகமானது 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்கு உரியது என்றால் சரியல்ல.

ஓம்/சாந்தி

M SHUNMUGA KANI

Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.04.25 10:54:57 +0530

சார்பு நீதிபதி,

குளித்தலை.